DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 123/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குணசேகரன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on01.09.2025.

முதல் விசாரணை

நான் அய்யம்பாளையத்தில் வசித்து வருகிறேன் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 25.12.2021 ம் தேதி காலை 9.15 மணியளவில் நான் அய்யம்பாளையத்திலிருந்து உடுமலை நோக்கி பைக்கில் தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தேன். லட்சுமி நகர் அருகில் வந்து கொண்டிருந்த போது ஒரு இருசக்கர வாகனம் பல்சர் வாகனம் ஓவர் டேக் செய்து வந்தது. எனக்கு முன்னால் போனதால் பார்த்தேன். ஆறுமுகம் என்பவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஸ்பிலண்டர் TN 42 X 0050 வாகனத்தின் வந்து கொண்டிருந்தார். ஓவர் டேக் செய்த பல்சர் வாகனம் ஸ்பிலண்டர வாகனததின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. பல்சர் வாகனம் வேகமாக வந்தது. ஆறுமுகம் என்பவருக்கு தலையிலும் கன்னத்திலும் அடிப்பட்டது. ஆறுமுகத்தின் மகன் சுரேஷ்குமாருக்கு தகவல் கொடுத்தேன். அவர் அங்கு வந்தார். ஆம்புலன்ஸ் மூலம் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். கோவை இராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சொன்னார்கள். பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் மாலையில் இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மூத்த வழக்கறிஞர் வெளியூர் சென்றுவிட்டதாக இளம் வழக்கறிஞர் தெரிவித்தார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.